SRI M. S. SELVARAJAN : Arising from the answer of the Hon. Minister it is learnt that the request of Thirisuthantharas has not been accepted. May I know on what basis the backwardness or most backwardness of communities is fixed up? Does not this particular community come under the purview of that basis?

கனம் திரு. பூ. கக்கன் : பாக்வேர்டா இல்லையா என்பதைப் பற்றிப் பரிசிலனை செய்யும்போது சமூகத்துறையில் எவ்வாறு இருக்கிறார்கள், கல்வித்துறையில் எவ்வாறு இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்துச் செய்கிறோம். அப்படிப் பார்க்கும்போது முக்காணி பிராமணர்களை பின்தங்கிய வகுப்பினரோடு சேர்ப்பதற்கு இல்லை என்ற நிலை இருக்கிறது. இப்பொழுது 10-வதுவரை சம்பளம் இல்லாமல் படிக்க ஏற்பாடு இருக்கிறது. அந்தச் சலுகையை அவர்கள் பெறலாம். பின்தங்கிய வகுப்பினரோடு சேர்ப்பதற்கு இயலாதிருக்கிறது.

SRI R. V. SWAMINATHAN : May I know whether it is a fact that the 'Lubbai' community amongst Muslims is treated as a backward community and is in the list of backward communities? When 'Lubbai' community is treated as backward community, why not the 'Thirusuthantharas' and 'Chidambáram Dikshidars' also be included in the list of " backward communities '?

THE HON. SRI P. KAKKAN : 'Lubbai' has been in the backward community list even before. It has been considered as a backward community and included in the list. The question of including 'Mukkani Brahmins' in the list of backward classes was also considered but we could not give effect to it.

நூற்பு ஆலைகள்

* 412 கேள்வி.—திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் (திரு. கே. சீமைச்சாமி சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மானாமதுரை அல்லது திருப்புவனத்தில் ஒரு நூற்பு ஆலை நிறுவும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government of India have granted a licence to an entrepreneur for the establishment of a spinning mill at Manamadurai. He is taking steps to implement the licence and the mill is expected to be commisioned soon.

திரு. எம். எஸ். செல்வராஜன் : புதிதாக ஒரு நூற்பாலை கூட்டுறவு முறையில் நிறுவ அடிப்படைத் தேவைகள் என்னென்ன? ப்ரமோடர்ஸ் எவ்வளவு தொகை சேர்க்க வேண்டும்? யார் யாரிடமிருந்து?

THE HON. SRI R. VENKATARAMAN : There is a question coming up regarding a co-operative mill. The supplementary can can be put when that question is taken up.